**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கட்கிழமை

TNTV06-000056/2025

**அசல் வழக்கு எண்.43/2025**

ராஜ்குமார் .... வாதி

**//எதிர்//**

1. சுமதி
2. நதியா
3. கல்யாணி .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளுக்கு போதுமான காலஅவகாசம் கொடுத்தும் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 04.11.2025 ம் தேதியன்று ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வித அத்துமீறலோ, ஆக்கிரமிப்போ, இடையூறோ ஏற்படுத்தக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**வாதி தரப்பு வழக்குரைச் சுருக்கம்**</u> :-

**2.1.** வாதிக்கு சொந்தமான தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகள் யாதொரு இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்தானது வாதி கடந்த 26.02.2018 ம் தேதியில் தாவா சொத்தின் முந்தைய உரிமையாளரான 27 செருமங்கலம் - 1 கிராமத்தை சேர்ந்த காந்தி அவர்களின் மனைவி சந்திரா அவர்களிடமிருந்து உரிய தொகை கொடுத்து முறைப்படி கிரயமாக பெறப்பட்டு மேற்படி கிரய ஆவணமானது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 738/2018 என பதிவாகியுள்ளது. மேற்படி தாவா சொத்தானது வாதி கிரயம் பெறப்பட்டது முதல் நாளது தேதி வரை வாதியின் தனிப்பட்ட அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. வாதி தாவா சொத்தினை கிரயம் பெற்ற பிறகு தாவா சொத்திற்குண்டான வருவாய்துறை அவணங்களான பட்டா, சிட்டா, அ-பதிவேடு போன்ற ஆவணங்கள் வாதியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு புல எண் உட்பிரிவு செய்யப்பட்டு அது முதல் வாதியின் பெயரிலேயே நாளது தேதி வரை இருந்து வருகிறது.

மேற்படி தாவா சொத்தானது தற்பொழுது நல்ல விலை போகக்கூடிய முக்கிய இடத்தில் உள்ளதாலும், தாவா சொத்திற்கு அருகில் பிரதிவாதிகளின் சொத்து இருப்பதாலும், பிரதிவாதிகள் தாவா சொத்தினை அவர்களுக்கு வேண்டும் என்று வாதியிடம் ஈனக்கிரயத்திற்கு கேட்டுள்ளனர். அதற்கு வாதி மறுக்கவே வாதியின் மீது பிரதிவாதிகள் தாவா சொத்தில் உனக்கு எந்த உரிமையும் இல்லை என்று கூறி தாவா சொத்தில் வாதியின்

அமைதியான அனுபவத்தை இடையூறு செய்து வீண் பிரச்சனைகள் செய்துள்ளனர்.

மேற்படி தாவா சொத்திற்கு அருகில் பிரதிவாதிகளின் சொத்து இருப்பதை அனுகூலமாக எடுத்துக்கொண்ட பிரதிவாதிகள் கடந்த 11.04.2025 ம் தேதியன்று தாவா சொத்தில் நின்று கொண்டிருந்த வாதியை தாவா சொத்தினைவிட்டு உடனே வெளியேறு என்றும், தாவா சொத்தினை எப்படியாகினும் ஆக்கிரமித்தே தீருவோம் என்று வாதியை மிரட்டியுள்ளனர். வாதி அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்து நிறுத்தியுள்ளார். மேற்படி தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதிகள் 3 ம் நபர்கள் ஆவார்கள். பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்திற்கும் யாதொரு சம்மந்தமும் இல்லாத நிலையில் தாவா சொத்தின் மீது பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட பேராசையினால் தொடர்ந்து தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடையூறு செய்து வருகிறார்கள். வாதிக்கு சொந்தமான சொத்தினை மோசடியாக அபகரித்துவிடலாம் என்ற கெட்ட எண்ணத்தோடு மேற்படி பிரதிவாதிகள் வாதியிடம் தொடர்ந்து வீண் பிரச்சனைகளையும், இடையூறுகளையும் செய்து வருகின்றனர்.

மேற்படி வாதிக்கு சொந்தமான தாவா சொத்தை வாதி அனுபவம் செய்வதை பிரதிவாதிகள் இடையூறு செய்வதும் தாவா சொத்தினை பிரதிவாதிகள் அத்துமீறி ஆக்கிரமிக்க முயற்சி செய்வதும் சட்டப்படி தவறானது என்றும், அதுபோன்று செயல்பட பிரதிவாதிகள் சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளனர். மேற்படி தாவா சொத்தில் வாதியின் உரிமையை மறைத்து வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வது சட்ட முரணான செயல் என்று வாதி தெரிவித்துள்ளார். பிரதிவாதிகளின் செயல் குறித்து வாதி காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றபொழுது மேற்படி பிரச்சனையானது சிவில் சம்மந்தப்பட்டது என்றும், உரிய நீதிமன்றம் மூலம் தீர்வு

கண்டுகொள்ளுமாறு கூறிவிட்டனர். எனவே தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும், பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வித அத்துமீறலோ, ஆக்கிரமிப்போ இடையூறோ ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரதிவாதிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்தும் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் கடந்த 04.11.2025 ம் தேதியன்று ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

4) வாதி தரப்பில், வாதி ராஜ்குமார் வா.சா.1 ஆகவும், மதியழகன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

6) <u>தீர்வு</u> ;-

1. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, நிரூபண வாக்குமூலம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 26.02.2018 ம் தேதியன்று வாதியால் கிரயம் பெறப்பட்ட கிரய ஆவணம் (ஆவண எண்.738/2018) நகல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 12.04.2025 ம் தேதியன்று வில்லங்க

சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 12.04.2025 ம் தேதியன்று வாதியின் பெயரில் உள்ள நத்தம் பட்டா நகல் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 12.04.2025 ம் தேதியன்று வாதியின் பெயரில் உள்ள அ-பதிவேடு கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்திற்குண்டான புல வரைபடம் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகவும், வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து மதியழகன் என்பவர் வா.சா.2 ஆகவும் சாட்சியமளித்துள்ளார்.

**2.** வாதியானவர் தாவா சொத்தின் உடமையிலும், அனுபவத்திலும் உள்ளார் என்பதை குறித்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கும் பொறுப்பானது வாதியைச் சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**3.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.1 ஆவணமான கிரய ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதியானவர் செருமங்கலம்-1 கிராமத்தை சேர்ந்த காந்தி என்பவரின் மனைவி சந்திரா அவர்களிடமிருந்து 26.02.2018 ம் தேதியன்று தாவா சொத்தை கிரயம் வாங்கியதற்கான கிரய ஆவணம் நகல் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணமான வில்லங்க சான்று கணினி நகல் என்பதும், மேற்படி வில்லங்க சான்றில் செருமங்கலம் கிராம், கடந்த 26.02.2018 ம் தேதியன்று சந்திரா என்பவர் வாதி ராஜ்குமாருக்கு எழுதிக்கொடுத்த கிரயம் ஆவணம் பற்றிய பதிவு உள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 ஆவணமான வாதியின் பெயரில் உள்ள நத்தம் பட்டா கணினி நகல் என்பதும், மேற்படி பட்டாவில் தாவா சொத்து வாதியின் பெயரில் உள்ளது என்பது தெரிய வருகிறது.

வா.சா.ஆ.4 ஆவணமான 12.04.2025 ம் தேதி வாதியின் பெயரில் உள்ள அ-பதிவேடு கணினி நகல் என்பதும், மேற்படி அ-பதிவேட்டில் நத்தம் ரயத்துவாரி மனை வாதி ராஜ்குமார் பெயரில் உள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.5 ஆவணமான தாவா சொத்திற்குண்டான புல வரைபடம் என்பதும், வா.சா.ஆ.6 ஆவணமான வாதியின் ஆதார் அட்டை நகல் என்பதும் தெரிய வருகிறது.

மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் மன்னார்குடி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மற்றும் மன்னார்குடி வட்டாட்சியரால் பெறப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களிலிருந்து வாதி ராஜ்குமார் தாவா சொத்தினை கிரயம் பெற்றார் என்பதற்கான உரிமை மூல மற்றும் உடமையிலுள்ள ஆவணங்கள் ஆகும். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களானது வாதியின் உடமையிலும், அனுபோகத்திலும் உள்ள சொத்தினை வாதியானவர் அனுபோகம் செய்து வருகிறார் என்பதற்கான ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்கள் மற்றும் சங்கதிகளை மறுக்க வேண்டிய பொறுப்புக்கொண்ட பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், நீதிமன்றத்தில் ஆஜராகாமலும் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, தாவா சொத்துக்களானது வாதியின் உடமையிலும், அனுபோகத்திலும் உள்ள சொத்துக்கள் என்பதை வாதி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.** வாதியின் உடமையிலும், அனுபோகத்திலும் உள்ள சொத்துக்களை பிரதிவாதி இடையூறு செய்கிறாரா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில் 12.04.2025 ம் தேதியன்று பிரதிவாதிகள் அவரது ஆட்களுடன் தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகள் இடையூறு ஏற்படுத்தியபோது

வழக்குமூலம் ஏற்பட்டது என்று வாதி சாட்சியம் அளித்திருப்பதை மறுக்க வேண்டிய பொறுப்புக்கொண்ட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே வாதியின் சுவாதீனத்திலுள்ள தாவா சொத்தை பிரதிவாதி இடையூறு செய்வதால் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எந்தவித அத்துமீறலோ, ஆக்கிரமிப்போ, இடையூறோ ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7) முடிவாக,**

1. தாவா அனுமதிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.
2. வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எந்தவித அத்துமீறலோ, ஆக்கிரமிப்போ, இடையூறோ ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.
3. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.06 17:17:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**வாதி தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.ராஜ்குமார் (வாதி), த/பெ. ராஜேந்திரன். |
| வா.சா.2 | திரு.மதியழகன் (3 ம் தரப்பினர்), த/பெ. ரங்கசாமி. |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.02.2018 | வாதியால் கிரயம் பெறப்பட்ட கிரய ஆவணம் (ஆவண எண்.738/2018) நகல். |
| வா.சா.ஆ.2 | 12.04.2025 | வில்லங்க சான்றிதழ் கணினி நகல். |
| வா.சா.ஆ.3 | 12.04.2025 | வாதியின் பெயரில் உள்ள நத்தம் பட்டா கணினி நகல். |
| வா.சா.ஆ.4 | 12.04.2025 | வாதியின் பெயரில் உள்ள அ-பதிவேடு கணினி நகல். |
| வா.சா.ஆ.5 | -- | தாவா சொத்திற்குண்டான புல வரைபடம் கணினி நகல். |
| வா.சா.ஆ.6 | -- | வாதி (ராஜ்குமார்)ன் ஆதார் அட்டை நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது). |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : - இல்லை.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.06 17:17:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.